2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எதிர்க்கட்சியினர் நடந்து கொண்ட இதே வெளிநடப்புச் செய்த முறையைத்தான் நேற்றைக்கும், அதற்கு முந்தைய நாளும் கடைப்பிடித்து இருக்கிறார்கள். இதே அவையில்-இதே அவையிலே என்றால், இந்தக் கட்டடத்திற்குள்ளே அமைந்திருக்கிற அவையிலே அல்ல; செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே அமைந்திருந்த சட்டப் பேரவையிலே நம்முடைய பேராசிரியர் உள்ளிட்ட 10 கழகச் சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு நாள், இரு நாள் வெளியேற்றவில்லை. அவர்களுடைய பதவியைப் பிடுங்கிக் கொண்டு, அவர்கள் பதவியில் தொடர்ந்து அதற்கு மேல் இருப்பதற்குத் தகுதியில்லை என்று, தகுதியைப் பிடுங்கிக் கொண்டு அவர்களை வெளியேற்றியபோதுகூட நாங்கள் அமைதியாகத்தான் இருந்தோம். இப்படி வெளியிலே உட்கார்ந்து கொண்டு கேலி, கிண்டல் போன்ற இந்தக் காரியங்களிலே நாங்கள் ஈடுபடவில்லை.

அதுமாத்திரம் அல்ல; பேராசிரியர் உள்ளிட்ட 10 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டபோது இன்றைக்குப் பதறியடித்துப் பேசுகின்ற தோழமைக் கட்சியினர்— எங்களுக்குத் தோழமைக் கட்சியினரோ, அவர்களுக்குத் தோழமைக் கட்சியினரோ தெரியாது. அவர்கள் யாரும், இந்த அளவிற்குக் கடுமையைக் காட்டவில்லை. அதுதான் விசித்திரம்.

நம்முடைய உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், நேற்றைய தினம் என்னிடத்திலும், நம்முடைய துணை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களிடத்திலும் மற்றும் உறுப்பினர்களிடத்திலும் பேசும்பொழுது இந்த விஷயங்களையெல்லாம் அவர் வரவேற்றதாகவோ, ஏற்றுக்கொண்டதாகவோ இல்லாமல் மறுபரிசீலனை செய்யுங்கள் என்றுதான் சொன்னார். மறுபரிசீலனை செய்வதைப் பற்றி நானும், பேராசிரியரும் மற்ற உறுப்பினர்களும் கலந்து பேசுவதற்கு முன்பாக, வழிமறித்துக் கொண்டு நேற்று ஒன்றரை மணி வரையில் கிண்டல், கேலி போன்ற நையாண்டிகளையெல்லாம் செய்து, பத்திரிகைகளிலே படம் வந்திருப்பதைப் பார்த்தால் அவர்கள் ஏதோ அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டு சோகத்திலே

இருப்பவர்களைப்போல் இல்லாமல் அவ்வளவுபேரும்-தாங்கள் ஏதோ பெரிய ஒரு காரியத்தைச் சாதித்துவிட்டு மகிழ்ச்சியில் இருப்பதைப்போல ஆனந்தத்திலே இருந்தார்கள். அந்த ஆனந்தம் நீடிக்கட்டும் என்றுகூட நாங்கள் எண்ணினோம். ஆனால், இன்றைக்கு தாங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று முன்வந்திருக்கிறார்கள். ஜனநாயகக் கடமையை ஆற்றுவதைப் பற்றி எங்களுக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஆனால், ஜனநாயகக் கடமையை ஆற்றும்போது, கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. கடந்த காலத்தில் என்னென்ன நடைபெற்றது தமிழகச் சட்டப் பேரவையில் என்பதை மறந்துவிடக் கூடாது. அதை மறந்துவிட்டு, இன்றைக்கு ஏதோ புதிய அணிகள் உருவாகிவிட்டது, அந்த அணியிலே இருக்கிறோம்-அதுகூட நிரந்தரம் இல்லை. அந்த அணியோடுதான் இருப்போம் என்பதுகூட நிரந்தரம் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலேகூட இன்றைக்கு ஜனநாயகத்திற்காக கம்யூனிஸ்டுகள் வாதாடுவதும், போராடுவதும், குரல் கொடுப்பதும் வேடிக்கையாக இருக்கிறது.

முற்பகல் 11-05

ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இன்றைக்கு எந்த நியாயத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் பேசுகிறார்களோ, அதே நியாயம் எல்லோருக்கும் பொதுவானதுதான் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இப்படி விவாதம் செய்ய, அ.தி.மு.க. கட்சிக்கு வக்காலத்து வாங்க, பரிந்து பேச உங்களுக்கு உருகிய அந்த உள்ளம், நாங்கள் பேரவையிலிருந்து பேராசிரியரும் மற்றும் 9 பேரும் அடியோடு நீக்கப்பட்டபோது, இந்த அளவிற்கு அப்போது ஏன் உருகவில்லை என்பதையும் எண்ணிப் பார்க்கிறோம். உண்மையான அண்ணாவினுடைய திராவிட முன்னேற்றக் கழகம், அழுத்தந்திருத்தமாக எந்த நேரத்திலும் எதையும் சமாளிக்கும் என்ற காரணத்தினால், ஒரு வேளை அன்றைக்கு எங்களை ஆதரித்துப் பேசியதோடு விட்டுவிட்டீர்கள் போலும்! இன்றைக்கு நீங்கள் ஏன் இப்படிக் கடுமையாக மாறியிருக்கிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். இருந்தாலும், நான் சட்டப் பேரவையின் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்; அவை முன்னவருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்களில், அன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் சபாநாயகர் எவ்வளவு உறுதியாக இருந்தார் என்பதற்கு ஓரேயொரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன்

2011 ஜனவரி 11] [கலைஞர் மு. கருணாநிதி]

எல்லோரும் வெளியேற்றப்பட்டபோது, அப்போது இந்த அவையிலே இருந்த நாஞ்சில் மனோகரன் அவர்கள் தன்னிலை விளக்கம் சொல்ல எழுந்தார். பேரவைத் தலைவர் அப்போது குறுக்கிட்டு-"There need not be a debate on my ruling" என்றார். உடனே மனோகரன் சொல்லுகிறார்: "Mr. Speaker, Sir, you should not arrogate to yourself the position of a Constitutional Pundit."

Speaker சொல்லுகிறார்: "I am not a Constitutional Pundit. I am only a student of Constitutional law. Please don't force me. There need not be any debate on my ruling. Don't speak on my ruling. That is over.

I am invoking my residuary powers. Please for Heaven's sake, respect this Institution. I will not allow any disrespect to the Constitution inside the House.

The Speaker has got ample powers. Legislature is a Democratic Institution. It is supreme. The House is supreme" என்று சொல்லி, பிரச்சினைக்கு அன்றைய பேரவைத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்தார். இந்தச் செய்தி தமிழ்நாட்டிலே உள்ள பத்திரிகைகளுக்கு எல்லாம் தெரியும். அந்தப் பத்திரிகைகளின் நிருபர்களும் இதைப் பற்றிக் குறிப்பெடுத்து, அவர்கள் ஏடுகளில் வெளியிட்டிருக்கிறார்கள். அப்போது நடைபெற்ற சம்பவங்களும் பத்திரிகைகளுக்குத் தெரியும். இப்போது நடைபெறுகின்ற இந்தச் சம்பவங்களும் தெரியும். ஆனால், இப்போது பத்திரிகைகளுக்குத் தெரிந்தது எல்லாம், அவைக்குள்ளே நடைபெற்ற அமளி, துமளி, ஆட்சிக்கு எதிராகப் போடப்படுகின்ற கூச்சல்தான். ஜனநாயகத்தைப்பற்றி, பேரவைத் தலைவரின் அதிகாரத்தைப் பற்றியெல்லாம் பத்திரிகைகளுக்கு இன்று தெரியவில்லை. தெரியும்; தெரியப்போகின்ற காலம் ஒன்று விரைவிலே வரும் என்ற அந்த நம்பிக்கையோடு நான் என்னுடைய கருத்தை நிறைவு செய்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 11-10

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பதில் என்கிற முறையில் நான் தெரிவிப்பதாகக் கருத வேண்டாம். சொல்ல

என்ற அந்த நம்பிக்கையோடுதான் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறேன். அதனைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் மீண்டும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை அவையிலே வைத்து விட்டு, அதற்கு என்ன பதில், முதல்வரோ அல்லது அவை முன்னவரோ இறுதியாக அளிக்கவிருக்கிறார்கள் என்பதைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் "வாக் அவுட்" செய்து விட்டார்கள். அவர்கள் "வாக் அவுட்"டிலே இன்றைக்குக் குறியாக இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. மேலிடத்துக் கட்டளை அப்படி. அதன்படி அவர்கள் நடந்துகொள்கிறார்கள். திரு. சிவபுண்ணியம் அவர்களுக்கு அது தெரிவதற்கு வழியில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் நன்மாறன் என்னுடைய பதிலைத் தெரிவிப்பதற்கு முன்பே எழுந்து போய்விட்டார். ஏனென்றால் அவர், பிரதான எதிர்க் கட்சியோடு அவ்வளவு நெருக்கமாக தொடர்பிலே இருப்பதாகக் காட்டிக்கொள்ள அவர் எழுந்து போய்விட்டார். சிவபுண்ணியம் எழுந்து போகவில்லை. இன்னும் நம்பிக்கையோடு இருக்கிற காரணத்தால் பிறகு போவார் என்று நான் நம்பவில்லை-போகக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். வெளிநடப்புச் செய்வதற்காகவே அவைக்குள்ளே வருவது சரியல்ல. கருத்துகளைச் சொன்னோம், அதற்கு எதிர்ப்பா என்று சிவபுண்ணியம் கேட்டார். கருத்துகளைச் சொல்வதற்காக அல்ல; அவைக் காவலர்களைத் தாக்கியதற்காக. அவை எல்லாம் படங்களாக டெலிவிஷன்களில் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சிவபுண்ணியம் போன்றவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்குப் பிறகும் அவர்கள் வன்முறையிலே ஈடுபடவில்லை; ரகளை செய்யவில்லை என்று கூற முடியாது. கவர்னர் உரைக்கு எதிர்ப்பாக மாத்திரமல்ல; கவர்னருக்கே எதிர்ப்பாக இங்கே தங்களின் அட்டகாசங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலுங்கூட, இப்பொழுதும் வெளியிலே சென்றவர்கள் உள்ளே வரத் தயாராக இருப்பார்களேயானால், 'மறப்போம், மன்னிப்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பிமார்களாகிய நாங்கள் எதையும் மறப்பதற்கும், மன்னிப்பதற்கும் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

2011 ஜனவரி 11] [திரு. வை. சிவபுண்ணியம்]

கோரிக்கைகளை வலியுறுத்தி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி எல்லாமே ஒரே நிலையின் அடிப்படையில்தான் இன்றைக்கு நடந்துகொண்டோம்.

ஆனாலும், முதல்வர் அவர்கள் நான் பேசியவுடனேயே, அதற்குப் பதிலைத் தெரிவித்து, 'அதன்மீது உரிய கருத்துகளை நான் தெரிவிப்பதற்கு முன்னாலேயே போய்விட்டார்களே' என்று அவர்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். திரும்பவும் அதைப் பரிசீலித்து, அந்த நடவடிக்கையைத் தளர்த்தி, அவர்களையெல்லாம் இந்தச் சபைக்கு வரவழைக்க வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்தமாக எல்லோருடைய கோரிக்கையும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன அடிப்படையிலேயே, 9 சட்டமன்ற உறுப்பினர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தளர்த்தி, அவர்களை இந்த அவையின் நடவடிக்கைகளிலே பங்குபெறச் செய்வதற்குரிய முயற்சியை, அவர்கள் முன்மாதிரியாக இருந்து—ஏற்கெனவே பலமுறை செய்யப்பட்டிருப்பதுதான் அந்த விஷயங்கள். இந்த முறையும் அதைச் செய்வது என்பதுதான்—கடந்த காலங்களிலே நம்முடைய நடைமுறையாக இருந்திருக்கிறது, நான் பார்த்த 15 ஆண்டுக் காலங்களில். அதையே இப்பொழுதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்கள் என்ற அடிப்படையிலே எல்லோருமே இப்பொழுது உள்ளே வந்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பின் மூலமாக அந்தக் காரியத்தைச் செய்து, அவர்கள் கடமையாற்றுவதற்கு வழிவகுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர், நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் அதையே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு விளக்கத்தைச் சொல்லிவிட்டு அதை ஏற்றுக்கொள்வதைப்பற்றி நான் சொல்ல இருக்கின்றேன்.

இதுவரையில் இதுதான் நடைபெற்றிருக்கிறது; வெளியேற்றிவிட்டு, பிறகு—வேண்டுகோள் வைத்தால், முதலில் எடுத்த முடிவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அவைக்குள்ளே மீண்டும்

அனுமதிக்கப்பட்டார்கள் என்று திரு. சிவபுண்ணியம் சொன்னாரே! அது மிக மிகத் தவறு; இமாலயத் தவறு. ஏனென்றால், 'இந்த அவையைவிட்டே நாங்கள் வெளியேறுகிறோம்' என்று அல்ல; 'பதவியைவிட்டே உங்களை வெளியேற்றுகிறோம்' என்று சொன்னதைக்கூட அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை. பதவியைவிட்டுப் போனவர்கள், போனவர்கள்தான். பேராசிரியர் உள்ளிட்ட 10 தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள். அதற்காக நம்முடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியோ வெளியிலே பெரிய போராட்டங்களை நடத்திவிடவில்லை. இதுபோல அவர்கள் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, அடுத்தடுத்து சட்டப் பேரவைக் கூட்டங்களில் கேட்டுக்கொள்ளவும் இல்லை. இதுதான் வரலாறு.

ஆனால், இன்றைக்கு அவர் வலியுறுத்துகின்ற இந்தக் கோரிக்கைக்கு நான் முன்கூட்டியே சொல்லிவிட்டேன் பதில். அண்ணா வழியிலே நடைபெறுகின்ற இந்த அரசு, 'நடந்தவைகளை மறந்துவிட்டு, இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும்' என்பதற்காக— அவர்கள் மீண்டும் அவைக்கு வந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. இராமகிருஷ்ணன், பேசுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறத்திற்கு இணையாக ஊரகப் பகுதிகளும், கிராமப் பகுதிகளும் மேம்பட வேண்டுமென்ற அந்த உயர்ந்த சிந்தனையில், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டிலே இருக்கின்ற 12,618 ஊராட்சிப் பகுதிகளிலும் அடிப்படைத் தேவைகளை, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக் கருதி இந்த ஐந்து ஆண்டுகளில் திட்டமிட்டு அந்தப் பணிகள் செய்யப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சியிலும் குடிநீர் வசதி, விளக்கு வசதி, வடிகால் வசதி, ஊருணி, இடுகாடு, இடுகாட்டுக்குச் செல்வதற்குண்டான சாலை, ஆழ்துளைக் கிணறு போன்ற வசதிகளையெல்லாம் செய்ததோடு, 'வீட்டுக்கு ஒரு நூலகம் வேண்டும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்; அதனையும் நம்முடைய துணை முதல்வர் அவர்கள் கருத்தில் கொண்டு